©
தமிழ்நாடு அரசு
2013

பதிவெண்: எம். 344

கோயம்பத்தூர் மாவட்ட அரசிதழ்

இணைப்பு–1

ஆணையின்படி வெளியிடப்பட்டது

ஆகஸ்ட் 2013

உள்ளாட்சித்துறை அறிவிக்கை

[ந.க. 1883/2007 (எம்.எச்.5), நாள் 18—6—2013.]

கோயம்பத்தூர் மாநகராட்சி

அறிவிக்கை

கோயம்பத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.71, நாள். 18.06.2013- ன் உண்மை நகல்

பொருள் எண் :15

பொருள்: கோயம்பத்தூர் மாநகராட்சி – நகரமைப்பு பிரிவு கோயம்பத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு உரிமம் வழங்குதல் – 01.04.2002 முதல் கட்டிட உரிமக் கட்டணம் அமுல் படுத்தப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டபடியால் மாநகராட்சியின் வருவாய் நிலை மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர புனரமைப்பு திட்ட நிபந்தனைப்படி உரிமக் கட்டணத்தை கூடுதலாக்கி திருத்தி அமைக்க மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் - தொடர்பாக.

கோயம்பத்தூர் மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு 451(2)ன் படியும், மாநகர மன்றத் தீர்மான எண்.400, நாள்.28.03.2002 ன் படியும், கோயம்பத்தூர் மாநகர எல்லையில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு உரிமம் வழங்குதல் மற்றும் இயந்திர நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குதல் ஆகியவைகளுக்கான கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு இக்கட்டண விகிதங்கள் 1.4.2002-ம் தேதி முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 31.07.2012-ம் தேதியுடன் 10 வருடங்கள் ஆகிவிட்டதால், தற்போது மாநகராட்சியின் வருவாய் நிலையைக் கருத்தில் கொண்டும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர புனரமைப்புத் திட்ட நிபந்தனையின்படியும் இக்கட்டணங்களை உயர்த்தி திருத்தி அமைப்பது மிக அத்தியாவசியமான ஒன்றாகும்.

மேலும், தற்போது நடைமுறைக்கு ஏற்றவாறும், அருகாமையில் உள்ள மாநகராட்சிகளின் கட்டணங்களை ஒப்பிட்டும், ஏற்கனவே இருந்த கட்டிட அனுமதி காலம் இரண்டாண்டில் இருந்து மூன்றாண்டாடிற்கு திருத்தியும், கட்டணங்கள் விகிதத்தை உயர்த்தியும், புதிய இனங்களுக்கான கட்டணம் நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நடைமுறையில் உள்ள கட்டணங்களை ஆய்வு செய்து புதிய கட்டணங்களை வசூலிக்கவும், மூன்றாண்டிற்கான கட்டிட அனுமதி வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் வழங்கலாம்

ந.க.எண்.18831/2007/எம்.எச்.5 மாமன்ற தீர்மானம் எண்.71, நாள்.18.06.2013

பொருளில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் வரிசை எண்.1ல் கட்டண விகிதங்களின் விவரம் என்ற களத்தில், இரண்டு மாடிகளுக்கு கீழ் என்ற தலைப்பின் கீழ்

அ) குடியிருப்பு கட்டணம் தரைத்தளம் மற்றும் பாகத்திற்கு மாற்றியமைக்கப்பட்ட கட்டணம் ரூ.200/-.

ஆ) கீழ்நிலை செல்லார்- க்கு மாற்றியமைக்கப்பட்ட கட்டணம் ரூ.400/-.

இ) முதல் தளம் ரூ.300/- என்பதற்குப் பதிலாக ரூ250/- என்று சேர்த்தும்,

இரண்டு மாடிகளுக்கு மேல் என்ற தலைப்பின் கீழ் (அ) முதல் (எ) வரை குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மாற்றியமைக்கப்பட்ட கட்டணங்களை நிர்ணயித்தும் அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

இக்கட்டண விகிதங்களை 1.10.2013 முதல் அமல் படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

[ந.க. 18831/2007 (எம்.எச்.5), நாள் 18—6—2013.]

கோயம்பத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 451(2)ன்படியும், கோயம்பத்தூர் மாநகர மன்றத்தின் 18.06.2013ந் தேதிய 71 எண்ணிட்ட தீர்மானத்தின்படியும் கோயம்பத்தூர் மாநகர எல்லைக்குள் கட்டப்படும் கட்டிடங்களுக்கு உரிமம் வழங்குதல் மற்றும் இயந்திர நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குதல் ஆகியவைகளுக்கு கீழ்கண்டவாறு திருத்திய கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த கட்டண விகிதம் 01.10.2013ம் தேதி முதல் மாமன்ற தீர்மானத்தின்படி அமுலுக்கு வருகிறது.

வ. எண்.	கட்டண விகிதங்களின் விவரம்	அளவு	அனுமதிக்காலம்		தற்போதுள்ள கட்டணம்	மாற்றி அமைக்கப்பட்ட கட்டணம்
			தற்போதுள்ள ஆண்டு	மாற்றி அமைக்கப்பட்ட ஆண்டு காலம்		
(1)	(2)	(3)	(4)	(5)	(6) ரூபாய்	(7) ரூபாய்
1.	குடியிருப்பு கட்டிடம் கட்ட அல்லது புதுப்பித்து கட்ட திருத்தி கட்டிக்கொள்ள, கூடுதல் கட்டிடம் கட்டிக் கொள்ள கூரை மாற்றம் முதலியவைகளுக்கு	10 ச.மீ.	2 ஆண்டு	3 ஆண்டு		
	அ. குடியிருப்பு கட்டிடம் தரைதளம் மற்றும் பாகத்திற்கு				70/-	200/-
	ஆ. கீழ்நிலை செல்லார்				ரூ.130/-	ரூ.400/-
	இ. கீழ்நிலை அறை செல்லார் / முதல் தளத்திற்கும், தரைத்தளத்திற்கும் இடைப்பட்ட தளம்				80/-	250/-
	ஈ. முதல் தளம்				90/-	400/-
	உ. இரண்டாம் தளம்				120/-	500/-
	ஊ. மூன்றாம் தளம்				140/-	600/-
	எ. நான்கு மற்றும் அதற்கு மேல் உள்ள மாடி ஒவ்வொரு தள கட்டிடம் 10 ச.மீ./ பாகத்திற்கு		2 ஆண்டு	3 ஆண்டு	250/-	1,000/-